# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 23, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மோரீஷஸுக்கு பெட்ரோலியப் பொருள்களை நீண்ட காலம் விநியோகிக்கும் வகையில் அந்த நாட்டுக்கும் இந்தியாவுக்கும் இடையே ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது.

    i. மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி, இரண்டு நாள் பயணமாக கடந்த 20,21-ஆம் தேதிகளில் மோரீஷஸ் பயணம் மேற்கொண்டபோது, பொதுத் துறை எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் மற்றும் மோரீஷஸின் அரசு வர்த்தகக் கழகம் இடையே இந்த 5 ஆண்டு கால ஒப்பந்தம் கையொப்பமானது.

    ii. இந்த ஒப்பந்தத்தின்படி, மோரீஷஸின் பெட்ரோல், டீசல் மற்றும் விமான எரிபொருள் ஆகியவற்றின் முழு இறக்குமதித் தேவையையும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் பூர்த்தி செய்யும்.

    iii. அந்த நாட்டுக்கு பெட்ரோலியப் பொருள்களின் உறுதியான விநியோகங்களை வழங்கவும், விலை ஏற்ற இறக்கங்களால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் வகையிலும் இந்த ஒப்பந்தம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

    iv. இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், 'மோரீஷஸ் நாட்டில் உள்ள மெர்ரோக் பகுதியில் ரூ.240 கோடி முதலீட்டில் சுமார் டன் 27,500 கொள்ளளவு கொண்ட எரிபொருள் சேமிப்புக் கிடங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. இது அந்த நாட்டின் எரி பொருள் சேமிப்புத் திறனை மேம்படுத்தும் என்பதுடன், முக்கிய எரிபொருள் நிரப்பும் மையமாகவும் அந்த நாட்டை மேம்படுத்தும்' என்று தெரிவித்தனர்.

    v. உலகின் முக்கிய கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு மையமாக உருவெடுத்துள்ள இந்தியா, தனது 23 சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து ஆண்டுக்கு சுமார் 26.7 கோடிடன் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருள்களை உற்பத்தி செய வதுடன், ஏற்றுமதி நாடாகவும் திகழ்கிறது.

    vi. நேபாளம், பூடான் போன்ற அண்டை நாடுகளுக்கு மட்டுமன்றி, இந்தப் பிராந்தியத்துக்கு அப்பால் உள்ள பிற சந்தைகளுக்கும் கணிசமான அளவில் ஏற்றுமதி செய்கிறது.

2. கனடா- அமெரிக்கா இடையிலான இறுதிக் கட்ட வர்த்தகப் பேச்சு தோல்வியுற்றதையடுத்து, குறிப்பிட்ட சில இறக்குமதிப் பொருள்கள் மீது இருதரப்பும் பரஸ்பரம் வரிகளை விதித்தன.

i. கனடா ஏற்றுமதி செய்யும் மொத்த பொருள்களில் சுமார் 5 சதவீத (2,000 கோடி டாலர் மதிப்பிலான) பொருள்கள் மீது அமெரிக்கா விதித்த 50 சதவீத புதிய வரி, கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரவிருந்தது.

ii. அதற்கு சில மணி நேரத்துக்கு முன்பு, கனடா பிரதமர் மார்க்கார் னியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் வரி விதிப்பை 3 நாள்களுக்குத் தற்காலிகமாக ஒத்திவைப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்தார்.

iii. இந்த இடைப்பட்ட காலத்தில் ஒப்பந்தத்தை எட்ட இருதரப்பு அதிகாரிகளும் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தனர். ஆனால், முன்னதாக எட்டப்பட்ட உடன்பாடுகளில் கனடா திடீரென புதிய கோரிக்கைகளை முன்வைத்து பின்வாங்கியதால் பேச்சு தோல்வியடைந்ததாக அமெரிக்க வர்த்தக பிரதிநிதி ஜேமிஸன் க்ரீயர் குற்றஞ்சாட்டினார்.

iv. கனடாவும் பதிலடி வரி:

- அதேநேரம், அமெரிக்கா இறுதி நேரத்தில் முன்வைத்த நிபந்தனைகள், பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தும் நியாயமற்றவையாக இருந்ததாக கனடா பிரதமர் மார்க் கார்னியும் பதில் குற்றச்சாட்டை முன்வைத்தார்.
- இதன் தொடர்ச்சியாக, அமெரிக்காவின் எஃகு, பால், மின்னணு பொருள்கள் உள்ளிட்டவற்றுக்கு எதிராக கனடா பதிலடி வரியை விதித்ததுடன், அது செப். 8 முதல் நடைமுறைக்கு வரும் எனவும் அறிவித்துள்ளது.

3. காஸாவுக்கு உதவிகளைக் கொண்டுசென்ற சமூக ஆர்வலர்களைத் தாக்கியது தொடர்பாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக 'இன்டர்போல் ரெட்' நோட்டீஸ் பிறப்பிக்குமாறு துருக்கி கோர உள்ளது.

i. நேட்டோ உறுப்பு நாடான துருக்கி, காஸாவில் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டங்களை இஸ்ரேல் தொடர்ந்து மீறுவதாக குற்றஞ்சாட்டி வருவதுடன், போர் நடவடிக்கைகளுக்காக பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக ஏற்கெனவே பல உள்நாட்டு பிடியாணைகளையும் பிறப்பித்துள்ளது.

ii. இந்நிலையில் கடந்த மே மாதம், காஸாவுக்கு உதவிகளை வழங்க சென்ற

நிவாரணக் கப்பலை சர்வதேச கடல் எல்லையில் வைத்து, இஸ்ரேல் படைகள் துப்பாக்கிச் சூடு நடத்தின. முன்னதாக, இதே போன்ற பல நிவாரணப் பயணங்களையும் இஸ்ரேல் தடுத்து நிறுத்தியுள்ளது.

4. ஜமைக்காவின் புகழ்பெற்ற ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட் படைத்த 100 மீட்டர் ஓட்டப்பந்தய உலக சாதனையை, சீனாவைச் சேர்ந்த மனித உருவ ரோபோ ஒன்று முறியடித்துள்ளது.

i. கடந்த 2009-ஆம் ஆண்டு, பெர்லினில் நடந்த உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் உசைன் போல்ட் 100 மீட்டர் தொலைவை 9.58 விநாடிகளில் கடந்ததே மனிதர்களின் உலக சாதனையாக இருந்து வருகிறது. இந்நிலையில், சீன ஸ்மார்ட் போன் தயாரிப்பு நிறுவனமான 'ஹானர்' உருவாக்கியுள்ள மனித உருவ ரோபோ, வெறும் 9.32 விநாடிகளில் 100 மீட்டர் தொலைவைக் கடந்துள்ளது.

ii. 'லைட்னிங்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த அதிவேக ரோபோ, பெய்ஜிங்கில் சனிக்கிழமை தொடங்கிய 2-ஆவது உலக மனித உருவ ரோபோ விளையாட்டுப் போட்டிக்கான முன்னோட்ட சோதனையின்போது விநாடிக்கு 14.5 மீட்டர் என்ற அதிகபட்ச வேகத்தை எட்டி, இச்சாதனையைப் படைத்துள்ளது.

iii. முன்னதாக, கடந்த ஏப்ரலில் நடைபெற்ற பெய்ஜிங் அரை மாரத்தான் (21 கி.மீ.) ஓட்டப்பந்தயத்திலும் இந்த 'லைட்னிங்' ரோபோ பங்கேற்று, 50 நிமிஷங்கள் மற்றும் 26 விநாடிகளில் இலக்கை அடைந்து வெற்றி பெற்றது.

iv. அந்த அரை மாரத்தான் போட்டியின்போது 169 செ.மீ. உயரமும், 95 செ.மீ. நீளமுள்ள கால்களையும் கொண்டிருந்த இந்த ரோபோவின் கால்கள், தற்போது உலக மனித உருவ ரோபோ விளையாட்டுப் போட்டிக்காக ஆராய்ச்சியாளர்களால் மேலும் 10 செ.மீ. நீட்டிக்கப்பட்டு, 1.05 மீட்டராக மேம்படுத்தப்பட்டுள்ளது.

v. ஏ.ஐ. மற்றும் வன்பொருள் துறையின் முன்னேற்றங்களைப் பயன்படுத்தி உற்பத்தி, தளவாடங்கள் மற்றும் நுகர்வோர் பயன்பாடுகளில் மனித உருவ ரோபோக்களின் ஈடுபாட்டை அதிகரிக்கும் நோக்கத்தில், இது போன்ற ரோபோக்களை ஒரு முக்கிய வளர்ந்து வரும் தொழில்துறையாக சீனா தீவிரமாக ஊக்குவித்து வருகிறது.

5. காங்கோ குடியரசின் வரலாற்றிலேயே மிக வேகமாக தீவிரமடைந்து வரும் எபோலா நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக, அந்நாட்டுக்கு 16,000-க்கும் மேற்பட்ட 'எர்வெபோ' தடுப்பூசிகள் வந்துள்ளன.
   i. உலக சுகாதார அமைப்பு மற்றும் அதன் கூட்டமைப்புகளால் அறிவிக்கப்பட்ட 70,000 தடுப்பூசிகளில், முதல்கட்டமாக இந்த 16,250 தடுப்பூசிகள் தலைநகர் கின்ஷாசாவுக்கு வந்தடைந்தன.
   ii. தற்போது காங்கோவில் பரவி வரும் 'புண்டிபுக்யோ' வகை எபோலா தீநுண்மிக்கு அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சையோ தடுப்பூசியோ ஏதுமில்லை. இருப்பினும், எபோலாவுக்கு சிகிச்சையளிக்க உதவும் எர்வெபோ தடுப்பூசி, இந்தத் தீநுண்மிக்கு எதிராகவும் ஓரளவு பாதுகாப்பை அளிக்கக்கூடும் என உலக சுகாதார அமைப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

6. உள்ளூர் செய்தி நிறுவனங்களுடன் வருவாயைப் பகிர்ந்துக் கொள்ளாத சமூக ஊடக நிறுவனங்களுக்கு 2.5 சதவீத வரி விதிக்கும் புதிய மசோதா ஆஸ்திரேலியாவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

7. ஜப்பானில் வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆசியப் போட்டியில் பங்கேற்க 492 பேர் கொண்ட இந்திய அணிக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
   i. ஜப்பானின் அயிச்சி- நகோயாவில் ஆசியப் போட்டி செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் நடை பெறுகிறது. இதில் 265 ஆடவர், 227 மகளிர் என மொத்தம் 492 பேர் கொண்ட இந்திய அணி பங்கேற்கிறது. தடகளத்தில் மட்டுமே 73 பேர் உள்ளனர்.
   ii. தடகளத்தில் நீரஜ் சோப்ரா, முரளி ஸ்ரீசங்கர், குல்வீர் சிங், தேஜஸ்வின் சங்கர், ஜோதி யார்ராஜி, பிவி. சிந்து, ஆயுஷ் ஷெட்டி, லக்ஷயா சென், காயத்ரி-ட்ரீஸா, சாத்விக்-சிராக், குத்துச்சண்டையில் லவ்லினா, நரேந்தர் பெர்வால், ஜாதுமணி ஆகியோரும், இ-ஸ்போர்ட்ஸ் பிரிவில் 15 பேரும், ரோயிங்கில் 22 பேரும் பங்கேற்கின்றனர்.

8. பொதுமக்கள் தங்கள் மதத்தைப் பின்பற்ற உரிமை இருந்தாலும், பொது ஒழுங்கை பாதுகாக்க சில நியாயமான கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்று பாட்னா உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

i. பிகார் மாநிலம் சிவான் மாவட்டத்தில், ஆண்டுதோறும் நடைபெறும் மத ஊர்வலத்தில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கைக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டதற்கு எதிராக, மாநிலத்தில் உள்ள பாட்னா உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஊர்வலத்தில் 300 பக்தர்கள் பங்கேற்க அனுமதி அளிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டது. இந்த மனு மீதான விசாரணையின்போது சட்டம்- ஒழுங்கு காரணமாக பக்தர்கள் எண்ணிக்கைக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதாகவும், 2024– ஆம் ஆண்டு ஊர்வலத்தின்போது வன்முறை ஏற்பட்டு காவல் துறையினர் மீது கற்கள் வீசப்பட்டு அரசு வாகனத்துக்குத் தீவைக் கப்பட்டதாகவும் மாநில அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ii. இந்த வழக்கில் நீதிபதி ஆலோக் குமார் அண்மையில் தீர்ப்பளித்தார். அப்போது அவர் கூறியதாவது: மத ஊர்வலங்கள் நடத்துவது உள்பட ஒருவர் தனது மதத்தை வெளிப்படையாக அறிவிக்கவும், அதைப் பின்பற்றவும் உள்ள உரிமை, அரசமைப்புச் சட்டத்தின் 19(1)(பி), 25-ஆவது பிரிவுகளின் கீழ் பாதுகாக்கப்படுகிறது. ஆனால், பொது ஒழுங்கு மற்றும் சமூக நெறிமுறைகளின் நலன் கருதி, அந்த உரிமைக்கு நியாயமான கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்று தெரிவித்து, மனுவை தள்ளுபடி செய்தார்.

9. நாட்டில் 15 முதல் 29 வயதுக்குட்பட்டபட்ட 8.7 கோடி இளைஞர்கள் படிக்கவோ, வேலை செய்யவோ அல்லது பயிற்சியையோ மேற்கொள்ளாமல் இருப்பதாக நீதி ஆயோக் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

i. 2047-ஆம் ஆண்டில் வளர்ந்த பாரதத்துக்கான திறனை மீண்டும் கட்டமைத்தல் என்ற தலைப்பில் நீதி ஆயோக் அறிக்கையை தயாரித்துள்ளது. 2021-இல் நடத்தப்பட்ட 78-ஆவது தேசிய மாதிரி ஆய்வில் கிடைத்த புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு அந்த அறிக்கையை தயாரித்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

- நாட்டில் 8.7 கோடி இளைஞர்கள் படிக்கவோ, வேலை செய்யவோ அல்லது பயிற்சியிலோ இல்லாமல் உள்ளனர். அதேபோல் வேலைவாய்ப்பும் இல்லாமல் உள்ளனர். அவர்கள் சுய வேலைவாய்ப்பில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்கு, குறைந்த தொகையிலோ அல்லது கட்டணத் தள்ளுபடியிலோ பயிற்சிகள் அளிக்க வேண்டிய உடனடி அவசியம்

ஏற்பட்டுள்ளது.

- அவர்களுடைய செயல்பாடுகள் தடைபட்டிருப்பதற்கு நிதி நிலையும் காரணமாகும். ஆதலால் அவர்களுக்கு உறுதியான நிதி ஆதரவும் அளிக்கப்பட வேண்டும். ஊதியத்துடன் சேர்ந்து அவர்களுக்கு அனைத்துத் துறைகளிலும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். நாட்டில் 8.25 சதவீதம் பட்டதாரிகள் மட்டுமே தங்களது கல்வித் தகுதிக்கேற்ப வேவைாய்ப்பில் உள்ளனர்.
- 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடாகவேண்டும் என்று இலக்கை அடைவதென்பது, நாட்டு மக்களின் கற்றல், ஊதியம் ஈட்டுதல், தொடர்ந்து முன்னேறுதல் ஆகிய வற்றையும் சார்ந்துள்ளது.
- 2014-15ஆம் ஆண்டுமுதல் இது வரை 7.67 கோடிக்கும் மேற்பட் டோருக்கே பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்று நீதி ஆயோக் குறிப்பிட்டுள்ளது.

10. தமிழ்நாட்டில் உள்ள அகதிகளை மீண்டும் தாயகம் அழைத்து வருவதற்கான இலங்கையின் நடவடிக்கைகளை வரவேற்றுள்ளது. ஐ.நா. கடந்த 1983- ஆண்டு இலங்கையில் இனமோதல் தொடங்கி, அதன் பின்னர் அந்நாட்டு அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே ஆயுத மோதல் தீவிரமடைந்தது.

i. இந்த மோதல் கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் நீடித்தது. இதனால் அந்நாட்டில் இருந்து ஏராளமானோர் அகதிகளாக தமிழ்நாட்டுக்கு வந்தனர்.

ii. இந்த அகதிகளில் சுமார் 18,000 பேர் 2002 முதல் 2022-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தாயகம் திரும்பினர். சுமார் 90,000 அகதிகள் தொடர்ந்து தமிழ்நாட்டில் வசித்து வருகின்றனர்.

iii. அவர்கள் மீண்டும் இலங்கை திரும்புவதை எளிதாக்கும் முன்னெடுப்புக்கான சிறப்பு ஏற்பாடுகளை, இந்த மாத தொடக்கத்தில் இலங்கை அரசு மேற்கொண்டது. போரின்போது சரியான ஆவணங்கள் இல்லாமல், இலங்கையைவிட்டு வெளியேறி தமிழ்நாட்டில் தஞ்சம் அடைந்த அகதிகள், தாங்களாக முன்வந்து விரைவாக நாடு திரும்புவதற்கு வசதியாக, குடியேற்ற நடைமுறைகளை எளிதாக்க அந்நாடு எடுத்த முடிவை தற்போது ஐ.நா. வரவேற்றுள்ளது.